©
தமிழ்நாடு அரசு
2009

பதிவெண்: எம். 312

# நீலகிரி மாவட்ட அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது

உதகமண்டலம், பிப்ரவரி 1, 2009
[தை 19–திருவள்ளுவர் ஆண்டு 2040] [எண் 2

பொருளடக்கம்

பக்க எண்

வனத்துறை அறிவிக்கை – – – – – – – 5
உள்ளாட்சித்துறை அறிவிக்கை – – – – – – – 6

## வனத்துறை அறிவிக்கை

*[ந.க. எண். 10571/2008 (வ—2), நாள் 5—12—2008.]*

**2008–2009 ஆம் ஆண்டிற்கு நீலகிரி மாவட்டம், நீலகிரி தெற்கு வனக்கோட்டத்தில் தீப்பற்றுவதை தடுப்பது குறித்த அறிவிப்பு.**

நீலகிரி மாவட்ட தெற்கு வனக்கோட்டத்தைச் சார்ந்த எல்லா கிராம அலுவலர்கள் மற்றும் பொது மக்களின் கவனம் தமிழ்நாடு வனத்துறைச் சட்டம் 23 ஆம் பகுதிக்கு ஈர்க்கப்படுகிறது. சட்டத்தின் சாராம்சம் கீழே வருமாறு—

1. எந்த ஒரு நபர் ஒதுக்குக் காட்டில் உரிமையுள்ளவரும் அல்லது வன உற்பத்தி பொருட்களை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டவரும் அல்லது மரங்களை வெட்டி அப்புறப்படுத்த அனுமதிக்கப்பட்டவரும் அல்லது கால்நடைகளை மேய்க்க அனுமதிக்கப்பட்டவரும் அல்லது மேற்படி நபர்களிடம் பணிபுரிபவர்கள் மற்றும் கிராம அலுவலர்கள் அல்லது மேற்படி காட்டு நில ஓரங்களில் குடியிருக்கும் அரசு அலுவலர்கள் அரசுக்குச் சொந்தமான காட்டு நிலங்களில் அல்லது அருகாமையில் ஏற்பட்ட நெருப்பின் காரணத்தை அறியப்பட்டிருப்பின், அதனை எவ்விதத் தாமதமும் இன்றி உடனடியாக அருகில் உள்ள வன அலுவலர் அல்லது காவல்துறை அலுவலருக்குத் தெரிவிக்கவும்.

(அ) மேற்படி காட்டு நிலத்தில் நெருப்பை அணைக்க;

(ஆ) அருகாமையில் ஏற்பட்ட நெருப்பு மேற்படி காட்டு நிலத்தில் பரவும் என்ற நிலை ஏற்படும் பட்சத்தில் அதனைத் தடுக்க;

(இ) அவ்வாறு குற்றம் நடந்திருப்பின், அக்குற்றத்தின் தடயங்களையும் குற்றம் செய்தவர்களைக் கண்டுபிடித்து கைது செய்ய, மேற்படி அலுவலர்களால் மேற்சொன்ன நபர்களின் உதவி மேலே கண்ட செயல்களுக்கு கோரினால் செய்யவும் கடமைப்பட்டவர்கள் ஆவார்கள்.

2. பொதுமக்களுக்கு மாவட்ட வன அலுவலர் இதனால் எச்சரிக்கை விடுப்பது என்னவெனில், வனத்தில் அல்லது அரசுக்குச் சொந்தமான வனத்தில் உள்ள புல்வெளிக்கு வேண்டுமென்றோ அல்லது தவறுதலாகவோ தீ மூட்டுபவர்கள் அல்லது மேற்படி செய்யப்பட்டவர் என நம்பப்பட்ட நபர்கள் இந்தியக் குற்ற தண்டனை

விதித் தொகுப்பு, பகுதி 42 அல்லது தமிழக வனச்சட்டம் 21 இன்படி தண்டிக்கப்படுவார்கள். கிராமத்தின், அருகில் தீ ஏற்படின், கிராம மக்கள் உடனடியாகத் தீயை அணைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேற்படி பணியைச் செவ்வனே செய்ய கிராம அலுவலர்கள் எதிர்பார்க்கப்படுகிறார்கள். கிராம எல்லைக்குள் ஆகும் தீ விபத்தை அருகாமையில் உள்ள வன அலுவலருக்குத் தெரிவிக்க வேண்டும். தீயின் காரணத்தை அறிய விசாரணை செய்யப்படும் எந்த ஒரு நபராவது காட்டு நிலத்திற்கு வேண்டுமென்றோ அல்லது அசம்பாவிதமாகவோ தீ வைத்தார் என நிரூபிக்கப்பட்டால், அவர் வனச்சட்டம் 21 ஆவது பிரிவின்படி ரூ. 500/— அபராதம் அல்லது சிறைத் தண்டனை ஆறு திங்கள் அல்லது இரண்டும் விதிக்கப்படுவார். மேலும், வனத்திற்கு உண்டான நஷ்டத்தை ஈடு செய்ய வேண்டியவராவார். வனத்தில் தீ உண்டானால், கால்நடை மேய்ச்சலுக்கு அப்பகுதி மூடப்படும்.

3. கிராம நிர்வாக அலுவலர்கள் தீ தடுப்பதில் உதவவும் மற்றும்;

(அ) இந்த விளம்பர அறிவிக்கையை கிராமச் சாவடிகளில் ஒட்டி தண்டோரா மூலம் பொது மக்களுக்கு அறிவித்து வனத்திற்கு தீ வைப்பவர்களையும் அல்லது வனத்தில் தீ பரவுவதை அனுமதிப்பவர்களையும் எச்சரித்து ஊர் மக்களுக்கு சொல்லவும்;

(ஆ) தீயை அணைக்க உடனடியாக ஆட்களை ஏற்பாடு செய்யவும், அருகாமையில் உள்ள கிராம எல்லை அல்லது அதற்கப்பாலும் வனத்தீயின் மூலக்காரணத்தை அறிய விசாரணை செய்ய உடனடியாக வட்டாட்சியருக்கு சொல்லவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்;

(இ) அவ்வப்போது பொது மக்கள் தீக்குற்றத்தைச் செய்வதில் மற்றும் தீயை அணைப்பதற்கு உதவும் விதத்தில் உள்ள இடர்பாடுகளை எடுத்துச் சொல்லி எச்சரிக்கப் பணிக்கப்படுகிறார்கள்.

(ஈ) அவ்வப்போது அழிப்பதற்கான நிலையில் தீயை மூட்டுவது வனச்சட்டத்தின்படி குற்றமாகும். ஒதுக்குக் காட்டுடன் சில நிலங்களையும் ஒதுக்குக் காட்டிற்குள் நேரடியாகவோ தொடர்பு கொண்ட நில உரிமைக்காரர்கள் தகுந்த முன் எச்சரிக்கையுடன் ஒதுக்குக் காட்டில் தீ பரவாதிருக்கும் வண்ணம் அவர்கள் நிலத்தில் தீயை மூட்டும்படி எச்சரிக்கப்படுகிறார்கள். இதைப் போலவே வண்டியோட்டிகளும், வாகன ஓட்டிகளும் பாதையில் தீ மூட்டாதிருக்க எச்சரிக்கப்படுகிறார்கள். வறட்சிக் காலம் நெருங்கிக் கொண்டிருப்பதால், அரசுக்கு சொந்தமான காட்டு நிலங்களில் தீ பரவும் காரியங்களை செய்யாதிருக்கும்படி சம்பந்தப்பட்ட அனைவரும் எச்சரிக்கப்படுகிறார்கள்.

(உ) தகுந்த மற்றும் போதுமான இடங்களில் பாதை ஓரங்களில் வண்டிகள் தங்க இடம் சுத்தம் செய்யப்பட்டுள்ளது. மற்ற இடங்களில் எரிப்பது இதனால் தடுக்கப்படுகின்றது. இதனைப் புறக்கணிக்கும் எந்த நபரும் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

உதகமண்டலம்,<br>5—12—2008.

(ஒ.இ.) X X X,<br>மாவட்ட வன அலுவலர்,<br>நீலகிரி தெற்கு கோட்டம்.

---

## உள்ளாட்சித்துறை அறிவிக்கை

[ந.க. எண். 7317/2008 (ஏ—4), நாள் 17—12—2008.]

### குன்னூர் நகராட்சி

**4—4—1938 ஆம் தேதிய தமிழ்நாடு அரசின் உள்ளாட்சித்துறை அரசு ஆணை எண். 1216 இன்படி வெளியிடப்பட்ட 6(1) விதியின் படியான அறிக்கை.**

**2009—2012 தொகுப்பு ஆண்டுகளுக்கான உரிம ஆணை மற்றும் ஒப்பந்தப்புள்ளி விளம்பர அறிவிப்பு.**

குன்னூர் நகர மன்றத் தீர்மானம் எண். 1083, நாள் 28—11—2008 குன்னூர் நகராட்சி அங்கீகாரத்திற்குட்பட்ட உரிம ஆணை மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் சம்பந்தப்பட்ட விதிகள் நிபந்தனைகள் இவைகளும் இனிமேல் ஏற்படும் சட்ட திட்டங்களுக்குட்பட்டும் கீழ்கண்ட இனங்களுக்கு 1—4—2009 ஆம் தேதி முதல் 31—3—2012 முடிய உள்ள 3 ஆண்டு தொகுப்பு காலத்திற்கு நகராட்சி ஆணையாளர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7 ஆம் நாள் புதன் கிழமை காலை 11—00 மணிவரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படும். அன்றே காலை 11—30 மணியளவில் இவ்வினங்கள் பொது ஏலத்தில் விடப்படும். பின்னர் வரப்பெற்ற ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும். உச்ச

ஏலக்கேள்வித் தொகை மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் குறிக்கப்பட்டுள்ள உச்ச கேள்வித் தொகை ஆகியவற்றில் எந்தத் தொகை அதிகமாக உள்ளதோ அதனை ஏற்பது பற்றி நகர மன்றம் முடிவு செய்யும். ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளுக்குத் தனித்தனியே வைப்புத் தொகைகள் செலுத்த வேண்டும். ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை அதற்குரிய தொகையை நகராட்சி கருவூலத்தில் செலுத்தி 6—1—2009 ஆம் தேதி மாலை 4—00 மணிக்குள் பெற்றுக்கொள்ளலாம். ஏலத் தேதியை மாற்றி வேறு தேதியில் நடத்த ஆணையருக்கு அதிகாரம் உண்டு.

பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் 1—4—2009 முதல் 31—3—2010 வரையான ஓராண்டுக் காலத்திற்கு மட்டுமே உரிம ஆணை கோரிய உயர்ந்த ஏலத்தொகையினை தெரிவிக்க வேண்டும். அவ்வாறு 2009—2010 ஆம் ஆண்டிற்கு கூறும் உயர்ந்த ஏலத்தொகையினை அடுத்து வரும் 2010—2011 இரண்டாவது உரிம காலத்திற்கு 5 சதவீதம் உயர்த்தியும், மூன்றாவது ஆண்டான 2011—2012 உரிம காலத்திற்கு இரண்டாவது காலத்திற்கு ஆண்டின் உரிம ஆணை தொகையில் 5% உயர்த்தியும் நிர்ணயித்து உரிம ஆணை வழங்கப்படும்.

மூன்று ஆண்டுகளுக்கு உரிம ஆணை இனங்கள்

| வரிசை எண். | குத்தகை விவரம் | ஏல வைப்புத் தொகை | வங்கி உத்தரவாத சான்று தொகை | வங்கி உத்தரவாத சான்று கொண்டு வராதவர்கள் கூடுதலாக செலுத்த வேண்டிய தொகை | ஏலம் உறுதியான பின் செலுத்த வேண்டிய முன்பணத் தொகை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | ரூபாய். | ரூபாய். | ரூபாய். | |
| 1. | நகராட்சி தினசரி சந்தை நுழைவாயில்களில் பின்வரும் அட்டவணை எண். 1 இன்படி கட்டணம் வசூலிக்கும் உரிமை. | 3 லட்சம் | 10 லட்சம் | 50,000/- | உரிமத் தொகையில் மூன்றில் ஒரு பங்கு நீங்கலாக உள்ள தொகையை 8 மாத தவணைகளில் செலுத்த வேண்டும். |
| 2. | நகராட்சி சந்தையில் உள்ள கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை. | 3 லட்சம் | 10 லட்சம் | 50,000/- | „ |
| 3. | அறிஞர் அண்ணா நகராட்சி பேருந்து நிலையத்தில் பேருந்துகள் நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமை. | 3 லட்சம் | 10 லட்சம் | 50,000/- | „ |
| 4. | அறிஞர் அண்ணா நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை. | 3 லட்சம் | 10 லட்சம் | 50,000/- | „ |
| 5. | ஜவஹர்பேட்டை வாகன நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை. | 1.50 லட்சம் | 3 லட்சம் | 50,000/- | „ |
| 6. | சிம்ஸ்பார்க் அருகில் வாகனங்கள் நிறுத்தக் கட்டணம் வசூலிக்கும் உரிமை. | 2.40 லட்சம் | 5 லட்சம் | 50,000/- | „ |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| | | ரூபாய். | ரூபாய். | ரூபாய். | |
| 7. | நகராட்சி லாரி நிறுத்தும் இடங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமை. | 50,000/- | 1 லட்சம் | 20,000/- | உரிமத் தொகையில் மூன்றில் ஒரு பங்கு நீங்கலாக உள்ள தொகையை 8 மாத தவணைகளில் செலுத்த வேண்டும். |
| 8. | நகராட்சி கால்நடை வெட்டும் இடங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமை. | 50,000/- | 1 லட்சம் | 20,000/- | „ |

## ஏலத்தில் கலந்து கொள்பவர்களுக்கான பொது நிபந்தனைகள்

1. Licence உரிமம் என்பது (Indian Easement) பிரிவு 32 இல் சொல்லியுள்ள விளக்கத்தின்படி பொருள் கொண்டது. அதனை குத்தகை (Lease) என்று பொருள் கொள்ளக்கூடாது. இவ்வினங்களில் வாடகை என்பதும் உரிமக்கட்டணம் என்று பொருள்படும். குத்தகை எனப்பொருள் கொள்ளக்கூடாது.

2. நகராட்சி ஆணையரால் சொல்லப்படும் உரிம ஒப்பந்தத்தில் உள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகள் பற்றிய வாசகங்கள் இறுதியானது. இதற்கேற்ப உரிமதாரர் நடந்து கொள்ள வேண்டும். விதிகள் அல்லது நிபந்தனைகளின் மீது நகரமன்றத்திற்கு முறையிடு செய்யலாம்.

3. உரிம காலம் என்பது 1—4—2009 முதல் 3 ஆண்டுகள் கொண்ட தொகுப்பு என பொருள் கொள்ளப்பட வேண்டும்.

4. ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளை படித்து அல்லது கேட்டு அவைகளுக்கு கட்டுப்பட்டு ஏலத்தில் கலந்து கொள்வதாகவும், ஏலம் நடைபெற்றதை ஏற்றுகொண்டதற்கு அத்தாட்சியாக ஏலப்பதிவேட்டிலும், ஏல நிபந்தனை அறிவிக்கையிலும் கையொப்பமிடவேண்டும்.

5. ஏலம் விடப்படும் எல்லா ஒப்பந்தம்/உரிமைகளையும் ஏலத்தில் பங்கு கொள்பவர்களின் முழு பொறுப்பில் விடப்படும். அதனால் ஏற்படும் இழப்புகளுக்கு நகரமன்றம் பொறுப்பாகாது. இழப்பீடு கோர உரிமையில்லை என்பதோடு நகர மன்றம் இவ்விண்ணப்பங்களை பரிசீலனைக்கு எடுத்துகொள்ளாது.

6. ஒவ்வொரு இனத்திற்கும் நேராக கலம் 3 மற்றும் 5 இல் குறிப்பிட்டிருக்கும் வைப்புத்தொகைகளை ஏலம் கோரும் நாளுக்கு முதல் நாள் மாலை 4.00 மணிக்கு முன்னதாக "ஆணையாளர் குன்னூர் நகராட்சி" என்ற பெயரில் வங்கியில் வாங்கப்பட்ட டிமாண்ட் டிராப்ட் மூலமாகவோ அல்லது பணமாகவோ நகராட்சியில் செலுத்த வேண்டும். வங்கி உத்தரவாத சான்றிதழ் ஏலம் நடைபெறும் தேதிக்கு ஒரு மாதத்திற்குள்ளான தேதியிட்டதாக இருக்க வேண்டும். நிர்ணயிக்கப்பட்டிருக்கும் வைப்புத் தொகைகளை ஏல நாளுக்கு முதல் நாள் டிமாண்ட் டிராப்ட் மூலமாக மற்றும் பணமாக செலுத்தியவர்கள் மட்டுமே ஏலம் கோர அனுமதிக்கப்படுவார்கள். வங்கி உத்தரவாத சான்றிதழ் 15 மாதங்களுக்கு செல்லத்தக்க வகையில் அசல் சான்றிதழாக சமர்ப்பிக்க வேண்டும்.

7. ஏலம் நகர மன்ற அங்கீகாரத்திற்கும், உறுதிசெய்யப்படுவதற்கும், உட்பட்டவை ஆகும். மேலும் உயர்ந்த பட்ச ஏலத்தொகை கோரியவருடைய வைப்புத்தொகையை தவிர மற்றவைகள் ஏலம் முடிந்தவுடன் திருப்பி அளிக்கப்படும்.

8. ஏலம் நடத்துபவர் விருப்பப்படி குத்தகை இனங்களில் ஏலங்களை முன்பின் நடத்தலாம். இதில் யாரும் தலையிட முடியாது.

9. முன்பு ஏலம் எடுத்தவர்கள் குத்தகை மற்றும் உரிம நிபந்தனைகளை மீறி குத்தகை செய்திருந்தாலும், அல்லது மாதாந்திர கிஸ்தி தொகைகளை சரியாக கட்டாமல் நிலுவை வைத்திருந்தாலும், அல்லது மாதாந்திர கிஸ்து தொகைகள சரியாக கட்டாமல் நிலுவை வைத்திருந்தவர்களும் அவரது வாரிசுகளும், இவ்வேலத்தில் பங்கு கொள்ள அனுமதிக்கப்படமாட்டாது.

10. முன்பு ஏலம் ஏடுத்தவர்கள் குத்தகை மற்றும் உரிம நிபந்தனைகளை மீறி குற்றம் புரிந்துள்ளார் என்று நகர மன்றம் கருதினாலும், அல்லது அந்நபர் திவாலானவர் எனத்தெரிந்தாலும், அவர் மற்றும் அவரது வாரிசுதார்களின் ஏலக்கேள்வியை ஏற்றுக்கொள்ளாமல் இருக்க நகர மன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

11. இந்நகராட்சிக்கு வரிகள் முதலியவைகள் செலுத்தாமல் அல்லது வேறு காரணத்திற்காவது நிலுவை உள்ளவர்கள் மற்றும் அவரது வாரிசுதாரர்களின் ஒப்பந்த புள்ளியையும் ஏலக்கேள்வியையும் நகராட்சி ஆணையாளர் அவர்களுடைய ஆலோசனைப்படி நகர மன்றம் நிராகரிக்கலாம்.

12. ஏலக்கேள்விகளை எவ்வித காரணமும் காட்டாமல் நிராகரிக்கவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ நகர மன்றத்திற்குமுழு அதிகாரம் உண்டு.

13. நகர மன்றம் ஏலக் கேள்வியை ஏற்றுக் கொள்ளாமல் அந்த ஏலத்தை மறு ஏலம் விட தீர்மானித்தால், மறு ஏலத்தின்போது முந்தைய அதிக பட்ச ஏலக்கேள்வித் தொகை அவரது பெயரில் ஆரம்பக் கேள்வியாக வைத்து ஏலம் விடப்படும். மறு ஏலத்தில் வைக்கப்படும் ஆரம்பக்கேள்விக்கு மேல் யாரும் ஏலம் கூறாவிட்டால் நகர மன்றத்தின் ஒப்புதலுடன் அதிகபட்ச ஏலத்தொகையை வைத்து ஏலம் கோரியவரின் ஏலத் தொகை ஏற்றுக் கொள்ளப்படும். இதற்கு அவர் கட்டுப்பட வேண்டும்.

14. குத்தகையினத்தில் மறு ஏலம் கோர விருப்பமுள்ளவர்கள் ஏலம் முடிவடைந்த நாளிலிருந்து இரண்டு தினங்களுக்குள் அலுவலக விடுமுறை நாளானால் அடுத்த வேலை நாட்களுக்குள் ஏலத்தில் கோரப்பட்டுள்ள தொகை முழுவதையும் டேவணித்தொகையுடன் செலுத்தி ஏலத்தொகையில் குறைந்தபட்சம் 25 சதவீதம் கூடுதலாக சேர்த்து ஏலத்தை ஏற்றுக்கொள்வதற்கான விண்ணப்பத்தினை ஆணையாளருக்கு முறையாக சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு பெறப்படும் விண்ணப்பத்தினை யாதொரு காரணமும் காட்டாமல் நிராகரிக்க ஆணையாளருக்கு முழு அதிகாரம் உண்டு.

15. நகர மன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உயர்ந்த ஏலத்தொகையை வெற்றிப்பெற்ற ஏலதாரரர் கட்டத் தவறினால் அல்லது ஒப்பந்தம் செய்துக்கொள்ள தவறினால் அந்த இனங்களைப் பொறுத்தவரை மறு ஏலம் நடத்தலாம் என்றோ அல்லது மறு ஒப்பந்தப் புள்ளி கோரலாம் என்றோ நகர மன்றம் தீர்மானித்து அதன்படி செயல்பட்டால் அதனால் ஏற்படும் சகல இழப்புகளுக்கும் அவரே பொறுப்பாவார் என்பதோடு அதனால் கிடைக்கும் லாபத்தில் அவருக்கு எவ்வித உரிமையும் இல்லை. மேலும் ஏலம் கூற அவர் செலுத்திய முன் வைப்புத்தொகை அனைத்தும் பறிமுதல் செய்யப்படும்.

16. ஏலம் உறுதி செய்வதற்கு முன் அல்லது உறுதியான பின் ஏலம் எடுத்தவர் சொத்து இல்லாதவரென்று நகர மன்றத்திற்கு சந்தேகம் ஏற்பட்டால் உரிமதாரர் சாதாரணமாக செலுத்த வேண்டிய டெபாசிட் தொகைக்கு இருமடங்கு டெபாசிட் செய்ய வேண்டும் என்றோ அல்லது சொத்துக்களை ஈடுகட்ட வேண்டியது என்றோ அல்லது நபர் ஜாமீனாவது கொடுத்து குத்தகைகளின் நிபந்தனைப்படி செலுத்த வேண்டிய தொகைகளை ஒழுங்காக செலுத்துவதற்கான ஜாமீன் பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டுமென்றாவது உத்தரவிடலாம். மேலும் நகராட்சி ஆணையாளர் கேட்கும்போது ஒப்பந்ததாரர் தனக்கு பாத்தியப்பட்ட அசையா சொத்துக்களின் ஆதாரப்பூர்வ ஆவணங்களை நகராட்சிக்கு தாக்கல் செய்ய வேண்டும்.

17. செலுத்தப்படும் முன் வைப்புத் தொகைகளுக்கும், உரிம தொகைகளுக்கும் எவ்வித வட்டியும் நகராட்சி வழங்கப்பட மாட்டாது.

18. வெற்றி பெற்ற ஏலதாரர் அவரது ஏலம் உறுதி செய்யப்பட்ட பின் அதனின்றும் விலகினால் அவரது முன் வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும். மறு ஏலம் விடுவதால் ஏற்படும் இழப்புகளுக்கு அவர் பொறுப்பாவார்.

## உரிமம் பெற்றவருக்கான பொதுவான நிபந்தனைகள்

1. பொது ஏலத்தில் எடுத்த உரிமங்களை/குத்தகைகளை வேறு எவருக்கும் உள் குத்தகைக்கோ/உள் வாடகைக்கோ/ உள் உரிமத்திற்கோ மாற்றக் கூடாது.

2. மன்றம் உச்ச ஏலக்கேள்வியினை ஏற்றதும் 15 நாட்களுக்குள் உரிமத் தொகை உச்ச ஏலதர்ரர் செலுத்தவில்லை எனில் உரிமம் கோரியவர் நிபந்தனையின்படியான தொகையை செலுத்த தகுதியற்றவர் என கருதி எவ்வித முன்னறிவிப்புமின்றி ஒப்பந்தம் தாமகவே இரத்தாகிவிடும். அவ்வாறு ரத்து செய்த நாளிலிருந்து உரிமக் கட்டணங்களை அலுவலகம் மூலம் வசூலிக்கும் உரிமை நகராட்சி ஆணையாளருக்கு உண்டு. நகராட்சி ஆணையாளரின் குறிப்பின் பேரில் மறு ஏலம் விட வேண்டும் என்று மன்றம் தீர்மானிக்கும் வரை அலுவலகம் மூலம் வசூலிக்கும் காலத்தில் ஏற்படும் சகல இழப்புகளுக்கும் தொகை செலுத்தாத உச்ச ஏலதாரரே பொறுப்பாகும்.

3. ஒப்பந்ததாரர்/உரிமதாரர் 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படியும் அதற்கு அவ்வப்போது அரசினரின் விதிகள் திருத்தத்தின்படியும் நடந்து கொள்ள வேண்டும். தவறும் பட்சம் விதி/ துணைவிதிகளின்படி அபராதம் செலுத்த கட்டுப்பட்டவராவார்.

4. உரிமதாரர்/ஒப்பந்ததாரர் ஒப்பந்தம்/உரிமம் பெற நகராட்சியால் விதிக்கப்பட்ட எல்லா நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டவராவார்.

5. நகராட்சி சந்தை/கால்நடை வெட்டும் இடம்/லாரி மற்றும் வாகன நிறுத்துமிடங்கள்/கட்டண கழிப்பிடங்கள் தற்பொழுது உள்ள கட்டிடங்களை திருத்தி கட்ட வேண்டும் அல்லது புதுப்பிக்க வேண்டும் அல்லது புதிய கட்டிடங்கள் கட்டுவதற்காகவோ அல்லது வேறு காரணங்களுக்கோ நகர மன்றத்திற்கு தேவைப்பட்டால் குறைவாகும் நிலப்பரப்பிற்கு உரிமதாரர்/ஒப்பந்ததாரர் இழப்பீடு எதுவும் கோர இயலாது.

6. நகராட்சி சந்தை/கால்நடை வெட்டும் இடம்/லாரி அல்லது வாகனம் நிறுத்துமிடங்களின் பாதை ஒரங்களில் கடைகள்/கிடங்குகள் போட அனுமதிக்கக் கூடாது.

7. நகராட்சி சந்தை/கால்நடை வெட்டும் இடம்/லாரி அல்லது வாகனம் நிறுத்துமிடங்களினுள் நகராட்சிக்கு சொந்தமான பொருட்களை கொண்டு செல்ல உரிமக் கட்டணம் வசூலிக்க விலக்களிக்கப்பட்டதாக கருத வேண்டும்.

8. நகராட்சி அல்லது பொது உபயோகத்திற்கு ஏல அறிவிப்பில் கண்டுள்ள நிலம் மற்றும் கட்டிடங்களின் பகுதிகள் தேவைப்படின் உபயோகபடுத்தி கொள்ள நகராட்சிக்கு முழு உரிமையுண்டு.

9. ஒப்பந்ததாரர்/உரிமதாரர் உரிமக் காலத்தில் மரணமடைய நேர்ந்தால் அவரது சட்டப்பூர்வ வாரிசுகள் நகர மன்றத்தின் ஒப்புதலுடன், அதே நிபந்தனைகளின் பேரில் உரிம கட்டணம் வசூலுக்கும் பணியினை தொடரலாம்.

10. காலமான உரிமதாரரின் வாரிசுகள் அவ்வாறு உரிமத்தினை தொடர இயலாது என்று எழுத்துப்பூர்வமான தமது மறுப்பினை நகராட்சிக்கு சமர்ப்பிக்கும் பட்சம், உரிமத்தினை நகர மன்ற ஒப்புதலுடன் மறு ஏலத்தில் விட்டு வேறு ஒரு உரிமதாரருக்கு ஒப்படைக்கும் நாள் வரையான காலத்திற்கு உண்டான உரிமத் தொகையை செலுத்திய பின்னரே உரிம பொறுப்பு நகராட்சியால் ஏற்று, புதிய உரிமதாரருக்கு ஒப்படைக்கப்படும். அக்காலம் வரையான உரிமத்தொகைக்கு காலமான உரிமதாரின் வாரிசுகள் பொறுப்பாளி ஆவார்கள்.

11. உரிமதாரர்கள்/குத்தகைதாரர்கள் மீது பெறப்படும் புகார்கள் சம்பந்தமான நகராட்சி ஆணையாளர் எடுக்கும் முடிவே இறுதியானது. உரிமதார் இவ்வுத்தரவிற்கு கட்டுப்பட வேண்டும்.

உரிமதார்கள் உரிமம் வசூலிக்கும் போது கடைபிடிக்க வேண்டிய விதிகள்

1. உரிமம் பெற்றவர் உயர்ந்த பட்ச கட்டணங்கள் நிர்ணயிக்கப்பட்டதைத் தவிர அதற்கு மேலாக எக்காரணம் கொண்டும் வசூலிக்கக் கூடாது. அவ்வாறு வசூலிக்கப்படுவது நகராட்சியால் உறுதி செய்யப்பட்டால் ரூ. 1,000/— மேற்படாமல் அபராதம் விதிக்கப்பட்டு, 1920 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், விதி 344 இன்கீழ் கிஸ்தி தொகையாக கருதப்பட்டு வசூலிக்கப்படும்.

2. உரிமதாரர்கள் நகர மன்றம் நிர்ணயித்த கட்டணத் தொகைகள் வசூலிக்கும்போது அதன் மதிப்பிற்கான அச்சிடப்பட்ட இரசீதுகள் கொடுக்க வேண்டும். இரசீதுகள் தரத் தவறுபவர்கள் மீது நடவடிக்கை எடுத்து ரூ. 1,000/— வரை அபராதம் விதிக்கப்படும்.

3. உரிமதாரருக்கென விவரிக்கப்பட்டுள்ள எந்த ஒரு பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளையும் மீறும் உரிமதாரருக்கு ரூ. 1,000/— வரை ஒவ்வொரு மீறுதலுக்கும் தனித்தனியே அபராதம் விதிக்க நகராட்சி ஆணையாளருக்கு உரிமை உண்டு. மேலும் இதன் காரணமாக உரிமம் ரத்து செய்யப்பட்டு அலுவலகம் மூலமாக உரிமம் நடத்தப்பட்டாலோ மறு ஏலம் விடப்பட்டாலோ அதனால் ஏற்படும் இழப்புகளுக்கு இவரே பொறுப்பாவார்.

4. உரிமதாரர் அபராதம் பற்றி அறிவிப்பு செய்த நாளிலிருந்து ஏழு நாட்களுக்குள் நகராட்சிக்கு செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தாவிடில் அத்தொகை பாக்கி உரிமத்தொகையாக கருதப்பட்டு அவர் உரிமம் பெற செலுத்திய முன் வைப்புத்தொகையிலிருந்து நகராட்சி கணக்கிற்கு சரி செய்யப்படும்.

5. உரிமதாரர் ஏலத்தில் எடுத்த உரிமங்களுக்கு தமிழ்நாடு அரசுக்கு செலுத்த வேண்டிய நில வாடகை அல்லது கந்தாயம் ஆகியன செலுத்த வேண்டுமாயின் அவைகளை நகராட்சி ஆணையாளரிடமிருந்து தகவல் பெற்றவுடன் நகராட்சி கஜானாவில் செலுத்த வேண்டும்.

6. உரிமக்கட்டணங்களை வசூலிப்பதற்கு உதவி தேவைப்படும் சமயம் நகராட்சி எவ்வித பொறுப்பும் ஏற்காது என்ற நிபந்தனையின் பேரில் உதவி செய்யப்படும்.

7. உரிமதாரர்/குத்தகைதர்ரர் உரிம நிபந்தனைகளை மீறினாலோ, துணை விதிகளை மீறினாலோ நகராட்சி அலுவலகம் மூலமாகமோ அல்லது நீதி மன்றம் மூலமாகவோ அவர் மீது நடவடிக்கை எடுத்து தண்டிக்கப்படும்.

8. உரிமதாரர்/குத்தகைதாரரிடம் ஒப்படைக்கப்படும் நகராட்சி சொத்துக்களில் நகராட்சி ஆணையாளரின் முன் அனுமதி இன்றி எவ்வித மாறுதலும் செய்யக்கூடாது. உரிமக்காலம் முடிவடைந்த பின் நல்ல நிலையில் நகராட்சி வசம் ஒப்படைக்க வேண்டும்.

9. எந்த வாகனமும் சந்தைக்குள் அல்லது வாகனம் நிறுத்தும் இடத்தில் 30 நிமிடங்கள் மட்டுமே நிறுத்த அனுமதிக்கப்படும். வெகுநேரம் நிறுத்தி வைக்க அனுமதிக்கக் கூடாது.

### உரிமத் தொகை செலுத்துவது சம்பந்தமான நிபந்தனைகள்

1. உரிமதாரர் செலுத்திய ஏலவைப்புத் தொகை மூன்று ஆண்டுகளின் தொகுப்பு காலத்தில் முறையே தலா மூன்றில் ஒரு பங்கு, ஒவ்வொரு ஆண்டின் உரிமத் தொகைக்கு அந்தந்த உரிம ஆண்டின் கடைசி காலாண்டின் உரிமத் தொகைக்கு சரி கட்டப்படும்.

2. உரிமதாரர் கோரிய உச்ச ஏலத் தொகையில், ஏல வைப்புத் தொகையாக செலுத்தியதில் மூன்றில் ஒரு பங்கு நீங்கலாக உள்ள உரிமத் தொகையை 8 மாத தவணைகளில் மே மாதம் முதல் டிசம்பர் மாதத்திற்குள் ஒவ்வொரு மாதமும் 5 ஆம் தேதிக்குள் நகராட்சி கருவூலத்தில் செலுத்த வேண்டும்.

3. காலம் தாழ்த்தி செலுத்தும் மாதாந்திர தவணைக்கு மாதம் ஒன்றுக்கு 2 சதவிகிதம் தண்டவட்டி வசூலிக்கப்படும்.

4. ஒவ்வொரு நிதி ஆண்டின் ஜனவரி மாதத்திற்குள் மேற்கண்டவாறு உரிமத் தொகை அனைத்தையும் செலுத்திய பின்னரே தொகுப்பாண்டின் அடுத்த ஆண்டில் மாத தவணைகளில் செலுத்த வேண்டிய உரிமத் தொகை நிர்ணயித்துத்தும் உத்தரவு வழங்கப்படும்.

5. மாத தவணை உரிமத் தொகையை தவறாது செலுத்தாத பட்சம் அனுமதியுடன் உரிமத்தை இரத்து செய்து பொது ஏலத்தில் விட நடவடிக்கை எடுக்கப்படும். பொது ஏலத்தில் விடப்படுவதால் ஏற்படும் இழப்புகளுக்கு முந்தைய உரிமதாரரே பொறுப்பாகும்.

6. உரிமதாரர் தமது உரிம காலத்தில் ஒவ்வொரு அரையாண்டிற்கும் தொழில் வரிக்கான சுய மதிப்பீட்டுப் படிவம் சமர்ப்பித்து தொழில் வரி செலுத்தி இரசீது பெற்றுக்கொள்ள வேண்டும்.

7. உரிமதாரர் வங்கி உத்தரவாத சான்றிற்கு பதிலாக கூடுதலாக செலுத்தும் தொகையை மூன்றாண்டு தொகுப்பு முடிந்த பின்னர் திருப்பிப் பெறுக்கொள்ளலாம். இதற்கு வட்டி ஏதும் வழங்கப்படமாட்டாது.

8. உரிமதாரர்/குத்தகைதாரருக்கு அவர் செலுத்திய தொகையில் மீதம் இருப்பின் அந்த ஆண்டு தணிக்கை முடிந்து அறிக்கை பெற்றபின் தணிக்கை ஆட்சேபணை இல்லை என்று தெரிந்த பின்னரே திருப்பி வழங்கப்படும். அத்தொகைக்கு வட்டி எதும் வழங்கப்படமாட்டாது.

9. கெடு கடந்து கட்டப்படும் கிஸ்தித் தொகைகளுக்கு நகராட்சிக்கு செலுத்தும் அபராதத் தொகையை எக்காரணம் கொண்டும் திரும்ப வழங்க இயலாது.

### 1. சந்தை உரிமக் கட்டணம் வசூலிக்கும் உரிமைக்கான சிறப்பு நிபந்தனைகள்

**ஏல வைப்புத் தொகை ரூ. 3,00,000/-**

1. பொது ஏல மற்றும் உரிம நிபந்தனைகள் அனைத்தும் இந்த இனத்திற்கு பொருந்தும்.

2. சந்தையின் எல்லா நுழைவாயில்களும் கொட்டகைகளும், பொது மக்கள் உபயோகத்திற்காக தினசரி காலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை திறந்து வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

3. சந்தை சுங்கம் வசூலிக்க ஒதுக்கப்படும் கொட்டகைகளை, கடையாகவோ அல்லது வேறு காரணத்திற்காக உபயோகப்படுத்தக்கூடாது.

4. அவ்வாறு ஒதுக்கப்படும் கொட்டகைகளுக்கு நகராட்சி ஆணையாளர் பெயரில் எடுக்கப்படும் மின் இணைப்புகளுக்கு ஏல வைப்புத் தொகை நீங்கலாக கூடுதலாக மின் இணைப்பு வைப்புத்தொகையாகரூ. 1,000/— (ஒராயிரம்) மட்டும் நகராட்சிக்கு செலுத்த வேண்டும்.

5. நகராட்சிக்காக அல்லது நகராட்சி உபயோகத்திற்காகவோ சந்தைக்குள் கொண்டு வரும் பொருட்கள் அல்லது வாகனங்கள் கட்டணம் செலுத்த விலக்களிக்கப்பட்டனவாகும்.

6. உரிமம் பெற்ற கடைக்காரர் மட்டுமே சந்தையினுள் மீன் விற்பனை செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.

7. சந்தையினுள் மத்திய, மாநில அரசுகள் தடைசெய்துள்ள அனைத்து தொழில்களையும் நடத்த அனுமதிக்கக் கூடாது. மேலும் மதுபானக் கடை மற்றும் வெடிமருந்துகள் சார்பான தொழில்களை நடத்த கூடாது. எரிவாயு, பெட்ரோல், மண்ணெண்ணெய் முதலிய தீப்பற்றக் கூடிய எவ்விதமான பொருட்களையும் விற்பனைக்காகவோ அல்லது சேமித்தோ வைக்கக்கூடாது.

8. சந்தையினுள் எளிதில் தீ பிடிக்கக்கூடிய ஓலை, தென்னங்கீற்று, சாக்கு மற்றும் பாலிதீன் முதலியவற்றைக் கொண்டு கொட்டகை, பந்தல் அமைக்கக் கூடாது. அவ்வாறு அமைக்கப்படும் பந்தல், கொட்டகைகள் எவ்வித அறிவிப்புமின்றி அகற்றப்படும். அதனால் ஏற்படும் இழப்புகளுக்கு சந்தை உரிமதாரர் பொறுப்பாகும்.

9. கடைகளுக்கு செல்லும் பாதைகளில் இடையூறுகள் எதுவும் இல்லாமல் இருக்கும்படி உரிமதாரர் பார்த்துக் கொள்ள வேண்டும். எவ்வித காரணத்தைக் கொண்டும் நடைபகுதிகளில் காய்கறி மற்றும் இதரபொருட்களை வைத்து வியாபாரம் செய்ய அனுமதிக்கக் கூடாது. அவ்வாறு அனுமதித்திருப்பது தெரிந்தால் உரிமதாரர் மீது நடவடிக்கை எடுத்து ரூ. 500/— நாளொன்றுக்கு அபராதம் விதிக்க நகராட்சி ஆணையாளருக்கு அதிகாரமுண்டு. மேலும் அவ்வாறு விற்பனை செய்த பொருட்கள் பறிமுதல் செய்யப்படும். இழப்பீடு எதுவும் வழங்கப்படமாட்டாது.

10. சந்தை வாயில்களில் சுங்கம் வசூலிபபவர்கள் சந்தையினுள் கடைக்காரர்/பொதுமக்கள் இரு சக்கர வாகனங்களை எடுத்து செல்லவோ அல்லது நிறுத்தவோ அனுமதிக்கக் கூடாது.

11. சந்தைக் கடைகளை வியாபாரம் தவிர குடியிருப்புக்காக உபயோகிக்கக் கூடாது.

12. சந்தையினுள் கடைக்காரர்கள் குப்பை/கழிவுகளை தமது சொந்த பொறுப்பில் குப்பை தொட்டியில் சேகரித்து தினசரி கடை கடையாக வரும் துப்புரவு பணியாளரிடம் ஒப்படைக்க வேண்டும். சாக்கடைகளிலும் நடைபாதைகளிலும் கடைக்கு முன்னாலும் குவித்து வைக்கக் கூடாது.

13. ஆணையாளரின் எழுத்து மூலமான உத்தரவு பெறாமல் எவ்வித பெட்டி அல்லது பெட்டிக்கடைகள் சந்தைக்குள் வைக்கக் கூடாது. அவ்வாறு மீறப்பட்டால் அவை அகற்றப்பட்டு பறிமுதல் செய்யப்படும்.

14. அரசு தடை செய்துள்ள 20 மைக்ரான் தடிமனுக்கு குறைவான பிளாஸ்டிக் பொருட்களை விற்பனை செய்யவோ பயன்படுத்தவோ கூடாது. மீறி பயன்படுத்தும் கடை உரிமதாரரது உரிமம் முன்னறிவிப்பு ஏதுமின்றி இரத்து செய்யப்படும்.

15. தரக்குறைவான மாமிசங்கள் சந்தையினுள் அனுமதிக்கக் கூடாது. நகராட்சி கால்நடை வெட்டுமிடத்தில் வெட்டப்பட்ட மாமிசங்கள் மட்டுமே சந்தையினுள் அனுமதிக்க வேண்டும். மாமிசம் கால்நடை மருத்துவரால் அங்கிகரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

16. உரிமதாரர் தமக்கு சுங்கம் செல்லுத்தாத இனங்களில் கொண்டு வரும் பொருட்களை சந்தையினுள் அனுமதிக்காமல் இருக்க அனுமதி பெற்றவராவார்.

17. ஒரு மாதம் முன்னறிவிப்பின் பேரில் சுங்கக் கட்டணத்தினை மாற்றி அமைக்க நகர மன்றததிற்கு உரிமை உண்டு.

18. சந்தையினுள் நகராட்சி ஆணையாளர் உத்தரவு இன்றி கட்டிடம் கட்டும் பொருட்கள், கருங்கல், ஜல்லி, மணல் போன்றவற்றை குத்தகைதாரர் அனுமதிக்கக் கூடாது.

19. ஒவ்வொரு இனங்களுக்கும் மன்றத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணங்களை அந்த ஆண்டிற்குள் குத்தகைதாரர் வசூல் செய்துக் கொள்ள வேண்டும். இதில் நிலுவை ஏற்பட்டால் அதற்கு நகராட்சி எவ்வித பொறுப்பும் ஏற்காது.

20. ஒரு மூட்டை அல்லது தலைச்சுமை பாரம் என்பது 100 கிலோ அல்லது அதற்கு குறைந்த எடை ஆகும்.

21. சந்தையினுள் இறைச்சிக் கடைகள் ஒவ்வொரு ஆண்டும் கீழ்கண்ட தினங்களில் மூடப்பட வேண்டும்.

1. திருவள்ளுவர் தினம்
2. மகாத்மாகாந்தி நினைவு நாள்
3. மஹாவீர் ஜெயந்தி
4. வடலூர் இராமலிங்கம் நினைவு நாள்

## நகராட்சி தினசரி சந்தை நுழைவாயிலில் வசூல் செய்ய நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கட்டண விவரங்கள்

### அட்டவணை—I

சந்தைக்கு கொண்டுவரும் பொருட்கள் மீது நுழைவாயிலில் கட்டணங்கள்

| வரிசை எண். (1) | பொருளின் விவரங்கள் (2) | வசூலிக்க அனுமதிக் கட்டணம் (3) |
|---|---|---|
| | | ரூ. பை. |
| 1. | சர்க்கரை மூட்டை, தானியம், உப்பு, மளிகை சாமான்கள், வெல்லம் மூட்டை மற்றும் கூடை ஒவ்வொன்றுக்கும் தலா | 2—00 |
| 2. | நல்லெண்ணெய், கடலெண்ணெய், தேங்காய் எண்ணெய், நெய், சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் முதலியன தலா டின் ஒன்றுக்கு | 2—00 |
| 3. | மண்ணெண்ணெய் பேரல் ஒன்றுக்கு | 5—00 |
| 4. | நாட்டு காய்கறி (நாட்டு கிழங்கு உட்பட) சிறிய அல்லது பெரிய கூடை | 2—00 |
| 5. | நாட்டு காய்கறி காலிகட் பெரிய வட்டக் கூடைஒன்றுக்கு தலா | 5—00 |
| 6. | 100 இலைகள் கொண்ட வாழை இலைக் கட்டு ஒன்றுக்கு | 2—00 |
| 7. | கருவேப்பிலை, கொத்தமல்லி, வேப்பிலை, மாவிலை கட்டு ஒன்றுக்கு | 2—00 |
| 8. | அரசாணிக்காய், பூசணிக்காய் ஒன்றுக்கு 2—00 | |
| 9. | புடலங்காய், 15 எண்கள் கொண்ட கட்டு ஒன்றுக்கு | 2—00 |
| 10. | பழங்கள் சிறிய அல்லது பெரிய கூடை ஒன்றுக்கு | 2—00 |
| 11. | பழங்கள் காலிகட் பெரிய வட்ட கூடை ஒன்றுக்கு | 5—00 |
| 12. | வாழைப்பழம் குலை ஒன்றுக்கு | 2—00 |
| 13. | 20 எண் வரை கொண்ட கரும்பு கட்டு ஒன்றுக்கு | 5—00 |
| 14. | சட்டி, பானை, பாய், கயிறு 50 எண்கள் கொண்ட சுமை ஒன்றுக்கு | 2—00 |
| 15. | மூங்கில் கூடை 100—க்கு | 5—00 |
| 16. | மூங்கில் பாய், சிறிய கயிறு பண்டல் ஒன்றுக்கு தலா | 2—00 |
| | **பலதரப்பட்ட சாமான்களுக்கு கட்டணம்** | |
| 17. | வெற்றிலை பலகை ஒன்றுக்கு | 2—00 |
| 18. | 5 குரோஸ் கொண்ட நெருப்புப் பெட்டி பண்டல் ஒன்றுக்கு | 2—00 |
| 19. | காகித பேல் கட்டு ஒன்றுக்கு | 5—00 |
| 20. | பொரி சிறிய மூட்டை ஒன்றுக்கு | 2—00 |
| 21. | பொரி பெரிய மூட்டை ஒன்றுக்கு | 5—00 |
| 22. | துணி சிறிய பேல் ஒன்றுக்கு | 2—00 |
| 23. | துணி பெரிய பேல் ஒன்றுக்கு | 5—00 |
| 24. | ரேடியோ செட் ஒன்றுக்கு | 3—00 |
| 25. | மருந்து, எலக்ட்ரிக் சாமான்கள், இரும்பு சாமான்கள் | 4—00 |
| 26. | டிவி. செட் ஒன்றுக்கு | 12—00 |
| 27. | மருந்து, எலக்ட்ரிக் சாமான்கள், இரும்பு சாமான்கள், ரெடிமேட் ஆடைகள் பாதரட்சைகள் பெரிய பெட்டி ஒன்றுக்கு | 5—00 |
| 28. | குழாய், இரும்பு பட்டைகள் கட்டு ஒன்றுக்கு | 5—00 |
| 29. | பூக்கூடை | 2—00 |

| (1) | (2) | (3) ரூ. பை. |
|---|---|---|
| 30. | ரொட்டி, பிஸ்கட் சிறிய/பெரிய கூடை ஒன்றுக்கு | 2—00 |
| 31. | படி சோப்பு கேஸ் ஒன்றுக்கு | 2—00 |
| 32. | பழைய சாமான்கள், கூடை அல்லது தள்ளு வண்டி ஒன்றுக்கு | 3—00 |
| 33. | நோட்டு புத்தகம், பாட புத்தகம், சிலேட்டுகள் பண்டல் ஒன்றுக்கு | 3—00 |
| 34. | டீ, காப்பி கொட்டை கேஸ் ஒன்றுக்கு | 2—00 |
| 35. | பழைய சாமான்கள், கூடை அல்லது தள்ளு வண்டி ஒன்றுக்கு | 3—00 |
| 36. | சோடா கலர் கேஸ் | 2—00 |
| 37. | மாவினால் செய்யப்பட்ட பண்டங்கள் கூடை ஒன்றுக்கு | 3—00 |
| 38. | அடுப்புக் கரி மூட்டை ஒன்றுக்கு | 3—00 |
| | **மாமிச வகைகளுக்கு கட்டணம்** | |
| 39. | மீன் கூடை ஒன்றுக்கு | 5—00 |
| 40. | கோழிக்கூடை ஒன்றுக்கு | 10—00 |
| 41. | கோழி முட்டை மற்றும் வாத்து முட்டை கூடை ஒன்றுக்கு | 3—00 |
| 42. | கருவாடு மூட்டை ஒன்றுக்கு | 3—00 |
| 43. | அறுக்கப்பட்ட ஆடு ஒன்றுக்கு | 4—00 |
| 44. | அறுக்கப்பட்ட மாடு அல்லது எருது ஒன்றுக்கு | 5—00 |
| | **பாரமாகக் கொண்டு வரும் பொருட்களுக்கு கட்டணம்** | |
| 45. | சட்டி பானை லாரி லோடு ஒன்றுக்கு | 30—00 |
| 46. | தேங்காய் லாரி லோடு ஒன்றுக்கு | 60—00 |
| 47. | காய் கறி, கிழங்கு, பழம் கொண்டு வரும் பாரமான லாரி லோடு ஒன்றுக்கு | 60—00 |
| | **சீமை காய்கறி வகைகளுக்கு கட்டணம்** | |
| 48. | உருளை கிழங்கு காய்கறி சிறிய அல்லது பெரிய கூடை | 2—00 |
| 49. | முள்ளங்கி/டர்ன்னிப்ஸ்/உருளைகிழங்கு/கேரட்/மூட்டை ஒன்றுக்கு | 5—00 |
| 50. | காய்கறி கார் ஒன்றுக்கு | 12—00 |
| 51. | காய்கறி கிழங்கு பாரமாக கொண்டு வரும் லாரி லோடு ஒன்றுக்கு | 60—00 |
| 52. | காய்கறி வேன் ஒன்றுக்கு | 25—00 |

**2 மற்றும் 3 கட்டண கழிப்பிடத்திற்கான சிறப்பு நிபந்தனைகள்**

**ஏல வைப்புத் தொகை தலா ரூ. 3,00,000/–**

அண்ணா பேருந்து நிலையத்திலும், நகராட்சி சந்தையிலும் அமைந்துள்ள சிறுநீர் மற்றும் மலம் கழிப்பிடங்களின் எண்ணிக்கை:—

| | அறிஞர் அண்ணா பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் | | நகராட்சி சந்தைக் கட்டண கழிப்பிடம் | | |
|---|---|---|---|---|---|
| | சிறுநீர் கழிப்பிடம் | மலம் கழிப்பிடம் | சிறுநீர் கழிப்பிடம் | மலம் கழிப்பிடம் | குளியல் அறை |
| ஆண் | 4 | 3 | 7 | 6 | 1 |
| பெண் | | 3 | — | 3 | |

1. கட்டண கழிப்பிடங்களில் சிறுநீர் மற்றும் மலம் கழிக்க நபர் ஒருவருக்கு ரூபாய் ஒன்று வசூல் செய்ய வேண்டும்.

2. உரிமைதாரர் கட்டணம் வசூலிக்க அச்சிடப்பட்ட இரசீது கொடுக்க வேண்டும். தவறும் பட்சம் ரூ. 1,000/— வரை தண்டம் விதிக்கப்படும்.

3. கழிப்பிடத்தை நாள் முழுவதும் கழுவி சுத்தமாக வைத்திருக்க உரிமதாரர் பொறுப்பாகும். அவர் தனது சொந்த செலவில் இதற்கு ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். சுத்தமாக பராமரிக்காத பட்சம் நகராட்சி துப்புரவு பணியாளர்களால் சுத்தம் செய்யப்பட்டு, அதற்குண்டான செலவு தொகை உரிமதாரரிடமிருந்து வசூலிக்கப்படும். மேலும் நாள் ஒன்றிற்கு ரூ. 500/— வீதம் அபராதம் விதிக்கப்படும்.

4. ஏலத்தில் எடுக்கப்பட்ட நகராட்சி கழிப்பிடத்திற்கு எவ்வித சேதமும் ஏற்படக்கூடாது. அவ்விதம் ஏற்படுத்தப்படும் சேதங்கள் நகராட்சி ஆணையாளரின் உத்தரவுபடி உரிமதாரர் தான் சரிசெய்து ஒப்படைக்க வேண்டும்.

5. கழிப்பிடத்திற்கு முன்புறம் கட்டணங்களை குறிக்கும் அறிவிப்புப் பலகை வைக்கப்படவேண்டும்.

6. நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்திற்கு அதிகமாக வசூலுக்க கூடாது. அவ்வாறு வசூலிப்பது கண்டுபிடிக்கப்பட்டால் ரூ. 1,000/— அபராதம் விதிக்கப்படும்.

7. அபிவிருத்தி பணிகளுக்காக கட்டண கழிப்பிடங்களை மூடவோ அல்லது இடிக்கவோ நேர்ந்தால் குத்தகை காலம் முடிய அனுமதிக்குமாறு கோர உரிமதாரருக்கு உரிமை இல்லை.

8. கழிப்பிடங்களை உபயோகிப்பவர்கள் கைகளை சுத்தம் செய்ய சோப்பு வைக்க வேண்டும்.

9. குளிப்பதற்கு வழங்கப்படும் வெந்நீருக்கு பக்கெட் ஒன்றுக்கு ரூ. 5/— வசூலிக்க வேண்டும்.

10. கட்டணக் கழிப்பிடத்தின் மின் கட்டணத்தை உரிமதாரர் "நகராட்சி ஆணையாளர்" பெயரில் செலுத்த வேண்டும்.

**4. அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் (13 நிலையம் கொண்டது) நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமை.**

**ஏல முன் வைப்புத் தொகை தலா ரூ. 3,00,000/–**

பேருந்து நிறுத்தும் நடை மேடை ஒவ்வொன்றின் அளவு 21'3'' x 15=13 எண்கள்

1. பேருந்து நிலையத்திற்குள் நுழையும் பேருந்து மற்றும் சிற்றுந்து வாகனங்கள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 8 (எட்டு) மட்டும் நுழைவு கட்டணம் வசூலிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

2. பேருந்து புறப்பட 5 நிமிடத்திலிருந்து 10 நிமிடத்திற்கு முன் பேருந்து நிறுத்தும் நிலையத்தினுள் நிறுத்தலாம்.

**சிம்ஸ் பார்க் மற்றும் ஜவகர்பேட்டை வாகன நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை.**

சிம்ஸ்பார்க் ஏல முன்வைப்புத்தொகை ரூ. 2,40,000/—

ஜவஹர் பேட்டை ஏல முன்வைப்புத்தொகை ரூ. 1,50,000/—

**5. ஜவஹர் பேட்டை வாகன நிறுத்துமிடம்**

1. ஜவஹர் பேட்டை நகராட்சி திடல் கடைகள் தவிர மீதமுள்ள காலியிடங்களில் வாகனம் நிறுத்த அனுமதித்து கட்டணம் வசூலுக்கப்பட வேண்டும்.

2. ஜவஹர் பேட்டை எதிரிலுள்ள மவுண்ட் சாலை பகுதிகளில் வாகனங்களை நிறுத்த அனுமதிக்க கூடாது.

3. ஜவஹர் பேட்டை வாகன நிறுத்துமிடத்தில் கார்கள் மற்றும் வேன்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 5 (ஐந்து), இரு சக்கர வாகனங்களுக்கு ரூ. 3 (மூன்று) வசூல் செய்யப்பட வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேல் அதிகமாக வசூலிக்கக் கூடாது. அவ்வாறு தவறுபவரிடமிருந்து ஒவ்வொரு தடவையும் ரூ. 1,000/— வரை தண்டம் வசூலிக்கப்படும்.

4. உரிமதாரர் கட்டணம் வசூலிக்க அச்சிட்ட இரசீது கொடுக்க வேண்டும். அவ்வாறு தவறுபவர்களிடமிருந்து ஒவ்வொரு தடவையும் ரூ. 1,000/— வரை தண்டம் வசூலிக்கப்படும்.

5. வாகனம் நிறுத்துமிடத்திற்கு அருகில் வசூலிக்கப்படும் கட்டணங்கள் குறித்து அறிவிப்பு பலகை வைக்க வேண்டும்.

6. உயர்ந்த ஏலம் கோரிய உரிமதாரர் மத்திய அரசின் வருமானவரித்துறை நிர்ணயித்துள்ள சேவைக்கட்டணம் செலுத்தி சான்றிதழின் நகலுடன் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு செலுத்தாத பட்சம் இத் தொகையை உரிமதாரரிடம் இருந்து வசூலித்து வருமானவரித் துறைக்கு செலுத்த நகராட்சிக்கு உரிமை உண்டு.

## 6. சிம்ஸ் பார்க் வாகனம் நிறுத்துமிடம்

1. சிம்ஸ்பார்க்கை ஒட்டியுள்ள கோத்தகிரி சாலை மற்றும் புனித அந்தோணியார் மேல்நிலைப்பள்ளிசாலை பகுதியில் மட்டுமே வாகனங்கள் நிறுத்த அனுமதித்து கட்டணம் வசூலிக்க வேண்டும்.

2. சிம்ஸ்பார்க் வாகனம் நிறுத்துமிடத்தில் வசூலிக்க வேண்டிய கட்டணங்கள்

| | |
|---|---|
| 1. பேருந்து மற்றும் 20 இருக்கைகளுக்கு மேற்பட்ட வேன்கள் | ரூ. 10 (பத்து) |
| 2. சிறிய வேன்கள் | ரூ. 5 (ஐந்து) |
| 3. கார்கள் | ரூ. 3 (மூன்று) |

3. உரிமதாரர் கட்டணம் வசூலிக்க அச்சிட்ட இரசீது கொடுக்க வேண்டும். அவ்வாறு தவறுபவர்களிடமிருந்து ஒவ்வொரு தடவையும் ரூ. 1,000/— வரை தண்டம் வசூலிக்கப்படும்.

4. வாகனம் நிறுத்துமிடத்திற்கு அருகில் வசூலிக்கப்படும் கட்டணங்கள் குறித்து அறிவிப்பு பலகை வைக்க வேண்டும்.

5. உயர்ந்த ஏலம் கோரிய உரிமதாரர் மத்திய அரசிற்குண்டான வருமானவரி நிர்ணயிக்கப்பட்ட சதவீதம் சேவைக்கட்டணமாக செலுத்த வேண்டும்.

## 7. லாரி நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை.

ஏல முன் வைப்புத் தொகை தலா ரூ. 50,000/—

1. நகராட்சி எல்லைக்குள் வி.பி. தெரு மற்றும் பார்லோஸ் சாலை பகுதிகளில் நிறுத்தப்படும் கனரக வாகனங்களிலிருந்து ரூ. 5/— (ஐந்து) மட்டும் கட்டணம் வசூலிக்க வேண்டும்.

2. காலை 6 மணி முதல் மறுநாள் காலை 6 மணிவரை வாகனம் நிறுத்த அனுமதிக்க வேண்டும்.

3. லாரி நிறுத்துமிடத்தை வேறு காரியத்திற்கு உபயோகிக்கக் கூடாது.

4. லாரி நிறுத்த வரையறுக்கப்பட்டுள்ள எல்லைக்குள் லாரி நிறுத்த அனுமதித்து அதற்குண்டான கட்டணத்தை வசூலிக்க வேண்டும்.

5. உரிமதாரர் கட்டணம் வசூலிக்க அச்சிட்ட இரசீது கொடுக்க வேண்டும். அவ்வாறு தவறுபவர்களிடமிருந்து ஒவ்வொரு தடவையும் ரூ. 1,000/— வரை தண்டம் வசூலிக்கப்படும்.

6. வாகனம் நிறுத்துமிடத்திற்கு அருகில் வசூலிக்கப்படும் கட்டணங்கள் குறித்து அறிவிப்பு பலகை வைக்க வேண்டும்.

7. உயர்ந்த ஏலம் கோரிய உரிமதாரர் மத்திய அரசிற்குண்டான வருமானவரி நிர்ணயிக்கப்பட்ட சதவீதத்தில் செலுத்த வேண்டும்.

**8. கால்டை வெட்டும் உரிமம்**

முன் வைப்புத் தொகை ரூ. 50,000/–

| கால்நடை வெட்ட நிர்ணயிக்கப்பட்டு வசூலிக்க அனுமதிக்கப்படும் | உயர்ந்த பட்ச கட்டணங்கள் |
|---|---|
| 1. ஒவ்வொரு மாட்டிற்கும் | ரூ. 15 (பதினைந்து) மட்டும் |
| 2. ஒவ்வொரு ஆட்டிற்கும் | ரூ. 10 (பத்து) மட்டும் |
| 3. மாடு, ஆடுகளின் ஈரல், போட்டி விற்பனை செய்யும் கடைளுக்கு மாத வாடகை. | ரூ. 60 (அறுபது) கடை ஒன்றுக்கு |
| 4. மாடு, ஆடு பட்டியில் அடைத்து வைக்க நாளென்றுக்கு | ரூ. 01 (ஒன்று) மட்டும் |

1. நகராட்சி கால்நடை வெட்டும் களத்தில் தான் வெட்டப்பட வேண்டும். தினசரி மாலை 2 மணி முதல் 6 மணிக்குள் வெட்டப்பட வேண்டும். அசாதாரண சூழ்நிலையில் நகராட்சி ஆணையரின் அனுமதி பெற்று காலை வேளைகளில் வெட்டலாம்.

2. கால்நடைகளின் ஈரல், போட்டி போன்ற பகுதிகளை வெட்டுபவர்கள் உடனே அப்புறப்படுத்த வேண்டும். இல்லையெனில் அது நகராட்சிக்கு உரியதாகும். இவற்றை விற்பனை செய்பவர்கள் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

3. இரத்தம் மற்றும் கழிவுப் பொருட்கள் சேகரிக்க நகராட்சிக்கு உரிமை உண்டு.

4. கால்நடை வெட்டுபவர்கள் அதற்கென தனியாக நகராட்சியின் உரிமம் பெற வேண்டும்.

5. கால்நடை வெட்டுமிடத்தின் அருகில் உள்ள கடைக்காரர்கள் அங்கு வியாபாரம் செய்ய நகராட்சியிலிருந்து உரிமம் பெற்றிருத்தல் வேண்டும்.

6. மீன் மற்றும் இறைச்சிக் கடைகள் ஒவ்வொரு ஆண்டும் கீழ்கண்ட தினங்களில் மூடப்பட வேண்டும் என்பதால் அந்நாளுக்கு முன்னால் கால்நடை வெட்டுவதை தவிர்க்க வேண்டும்.

1. திருவள்ளுவர் தினம்

2. மகாத்மாகாந்தி நினைவு நாள்

3. மஹாவீர் ஜெயந்தி

4. வடலூர் இராமலிங்கம் நினைவு நாள்

7. கால்நடை வெட்டுமிடத்தில் உள்ள பட்டி ஆடு, மாடுகளை தங்க வைக்க உபயோகிக்கப்பட வேண்டும். வேறு எந்த பிராணிகளையோ அல்லது வேறு காரணத்திற்கோ உபயோகிக்க கூடாது.

8. கால்நடை வெட்டுமிடத்தில் சேரும் கழிவுகளான சாணி, எலும்புகள் ஆகியவற்றை நகராட்சி உரக்கிடங்கிற்கு சேகரிக்க தக்கவாறு பராமரித்தல் வேண்டும்.

9. கால்நடை வெட்டுமிட கட்டிடத்திற்கு எவ்வித சேதாரமுமின்றி பராமரித்தல் வேண்டும். சேதம் ஏற்படுமாயின் அதற்கு உரிமதாரரே முழு பொறுப்பாகும்.

10. கால்நடை வெட்டுமிடம் மாற்றி கட்டப்பட்டு அபிவிருத்தி செய்யப்படும் பட்சம் கால்நடை வெட்டும் கட்டணத்தை உயர்த்தி நிர்ணயிக்கவோ, அபிவிருத்தி செய்யப்பட்ட பின் மறு ஏலம் விடவோ நகராட்சிக்கு அதிகாரம் உண்டு.

குன்னூர்,
21—11—2008.

(ஒ.இ.) X X X,
ஆணையாளர்,
குன்னூர் நகராட்சி.

தமிழ்நாடு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை முதன்மை செயலர் மற்றும் இயக்குநரால் சேலம் அரசினர் கிளை அச்சகத்தில் அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்பட்டது.